



நாமக்கல் மாவட்டம் நாமக்கல் வட்டம், ஒன்றியம் தொட்டிப்பட்டி ஊராட்சியில் அமைக்கப்படவுள்ள பாதை, இடம் பூங்கா, பொது இடம், தொட்டிப்பட்டி கிராமம் சர்வே எண் 115/2 ல் மனைப்பிரிவு பரப்பு 2.405 ஏக்கர் (அ) 9732.0 ச.மீ பட்டா எண் 1354 ல் உள்ள 54 மனை 1 கடை அமைக்கப்பட்ட மனைப்பிரிவிற்கு மனைப்பிரிவு வழங்குவதற்கு மன்றத்தில் அங்கீகரிக்கப்பட்டது.
தீர்மான எண் : 88
நாள் : 15.3.2024

B [signature]
தலைவர்
தொட்டிப்பட்டி ஊராட்சி.

# மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் (DTCP) நாமக்கல்

## நாமக்கல் ஊராட்சி ஒன்றியம்

நாமக்கல் மாவட்டம், நாமக்கல் வட்டம், நாமக்கல் ஊராட்சி ஒன்றியம், தொட்டிப்பட்டி ஊராட்சி/கிராமம் ச.எண். 115/2-ல் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவுக்கான மனைகள் அமைப்பு தொழில் நுட்ப ஒப்புதல் வரைபடம்.

அளவு : 1:400
கோப்பு எண் : 1OL258QU (12279/2023NKL)
இணையதள விண்ணப்பம் எண் : 1OL258QU/2023/TCP4

**குறிப்பு :**

| | |
|---|---|
| மனைப்பிரிவின் பரப்பு | : 2.405 ஏக்கர் (அ) 9732.0 ச.மீ |
| கடை | : 01 |
| கோரிய மனைகள் | : 56 |
| ஒதுக்கிய மனைகள் | : 54 |

மனைப்பிரிவு எல்லை........................................
நிலையிலுள்ள சாலை........................................

**பொது ஒதுக்கீடுகள் :**

(உத்தேச சாலை பரப்பளவு நீங்களாக மீதமுள்ள மனைப்பிரிவு பரப்பளவிற்கு கணக்கீடு செய்யப்பட்டுள்ளது)

**உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டுள்ளது:**

உத்தேச சாலைகளின் பரப்பளவு (மூலை முடக்குகள் உட்பட) : 2219.0 ச.மீ......
ஒதுக்கப்பட வேண்டிய பூங்காவிற்கான பரப்பு : 751.30 ச.மீ
ஒதுக்கப்பட்ட பூங்காவின் பரப்பு : 832.68 ச.மீ (11.08%)........................

**பொது உபயோகம் (TNCDBR-47(8)-ன் படி தானமாக ஒப்படைக்கப்பட்டுள்ள 1% ஒதுக்கீடு):**

1. உள்ளாட்சிக்கான ஒதுக்கீட்டின் பரப்பளவு : 35.49 ச.மீ (0.50%)................................
2. TANGEDCO-க்கு ஒதுக்கீட்டின் பரப்பளவு : 38.99 ச.மீ (0.52%)................................

மூலை முடக்கு :-12.0மீ வரையிலான அகல சாலைகளுக்கு 1.5மீx1.5மீ விடப்படல் வேண்டும்.

**நிபந்தனைகள்:**

1. இம்மனை பிரிவிற்கு உள்ளாட்சி இறுதி ஒப்புதல் அளிக்கும் முன் இடத்தினை எந்த துறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை என்றும், எந்த துறைக்காகவும் நில ஆர்ஜிதப்பட்டியல் மாவட்ட வருவாய் அலுவலருக்கு அனுப்பப்படவில்லை என்றும், உள்ளாட்சி தலைவர் உறுதி செய்து கொள்ள வேண்டும்.
2. அரசாணை எண் 18-ல் நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை நாள் 04.02.2019-ன்படி உள்ள நிபந்தனைகளை கடைப்பிடிக்க வேண்டும்.
3. அரசாணை எண். 181 வீட்டு வசதி (ம) நகர்புற வளர்ச்சி ந.வ.4(1) துறை நாள். 09.12.2020-ன்படி நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும்.
4. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என்று அறியப்பட்டாலோ அல்லது மனைப்பிரிவுக்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டாலோ மனைப்பிரிவுக்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களால் ரத்து செய்யப்படும்.
5. விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும் போது இவ்வாணையின் நகலோடு நகர் ஊரமைப்புத் துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபட நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.
6. நகர் ஊரமைப்புத் துறை சட்டப்பூர்வமாக தொழில்நுட்ப அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை தொழில்நுட்ப அனுமதி/திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்பித்த ஆவணங்களில் (கிரையப்பத்திரம் - குத்தகை பத்திரம் - பட்டா- தானபத்திரம் -பொது அதிகார பத்திரம் மேலும் பல விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்கப்படுகிறது.சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும் விண்ணப்பதாரருக்கு சொத்தின்மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக்கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்பத்துறை பொருத்தமான அமைப்பு அல்ல.
7. நீர்நிலைகள் பாதிக்கப்படாத வண்ணம் கட்டிடம் கட்டப்பட வேண்டும்.
8. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எந்த வித மாற்றம் விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவாயில் 6" x 4" அளவிலான நிரந்தர தகவல்பலகை மூலம் பொது மக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும்.
9. நீதிமன்ற வழக்கு ஏதெனும் நிலுவையில் இருப்பின் இத்துறையின் மனைப்பிரிவு அனுமதி செல்லத்தக்கது அல்ல.
10. இம்மனைப்பிரிவிலிருந்து அருகிலுள்ள இடத்திற்கு செல்லும் வரைபடத்தில் காண்பிக்கபட்டுள்ளவாறு மனைப்பிரிவு சாலைகளின் குறுக்கே சாலையின் போக்கினை பாதிக்கும் வகையில் சுற்றுச்சுவர் கட்டப்பட்டிருப்பின் அகற்றப்படல் வேண்டும்.உத்தேச மனைப்பிரிவு சாலைகளுக்கு மனுதாரரால் தார் சாலை அமைக்கப்பட்டு (BDO/UE) வட்டார வளர்ச்சி அலுவலர்/யூனியன் பொறியாளர் அவர்களிடம் தரம் குறித்து தகுதிச்சான்று பெறப்பட்ட பின்னர் உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

**APPROVAL NO: SWP /DTCP / NAMAKKAL / LAYOUT NO: 36/2024**

| | | | | |
|---|---|---|---|---|
| திரு.ச.பிரபு சங்கர்<br>அளவர்/உதவி வரைவாளர் | Signature valid<br>Signed by: Assistant<br>Location:Namakkal<br>Date:2024.02.16 | திரு.ச.சுரேந்திரன்<br>வரைவாளர் நிலை-III | திருமதி.மு.தேன்மொழி<br>மேற்பார்வையாளர்/வரைவாளர் நிலை-II | (E-Sign)<br>உதவி இயக்குநர்<br>மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்<br>நாமக்கல் |